# 5 விரதங்கள்

சைவ மக்கள் தம் வாழ்வை நெறிப்படுத்தி, ஆன்மீகத் துறையில் முன்னேறவும் முத்தியடையவும் உதவும் சாதனங்களில் விரதமும் ஒன்றாகும். உபவாசம், நோன்பு என்பன விரதத்துடன் தொடர்பான சொற்களாகும்.

விரதம் என்னும் சொற்பதம் உண்ணும் உணவைச் சுருக்குதல் அல்லது தவிர்த்தல் என்பதைக் குறிக்கின்றது. உபவாசம் என்னும் சொல்லானது இறைவனின் அருகே வசித்தல் என்னும் பொருளைக் குறிக்கின்றது. மேலும், ஒரு நாள் அல்லது நாட்கள் உணவு வகை எதனையும் உட்கொள்ளாது இறை சிந்தனையுடன் தீவிரமாக ஈடுபடுவதை உபவாசம் எனலாம். உணவை தவிர்த்தல் என்பதன் மூலம் பெருமை என்னும் பண்பு மேலோங்கும்போது அது நோன்பாகக் கருதப்படும். இவ்வாறான விரதத்தின் சிறப்பை நல்லைநகர் ஆறுமுக நாவலர் அவர்கள் வரையறை செய்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## வரையறை

''விரதமாவது மனம் பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு, உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் எனும் மூன்றினாலும் கடவுளை மெய்யன்போடு விதிப்படி வழிபடல்' என்பது அந்த விரத வரையறையாகும். இந்த வரையறைக்குள் பல விதிகள் அடங்கியுள்ளன.

விரதம் ஆறு அல்லது பன்னிரண்டு ஆண்டுகள் அனுட்டிக்கப்பட வேண்டும் விரதம் நிறைவு நாளின் மறுநாள் பாரணம் அல்லது பாரணை என்ற உணவு உண்ணும் சம்பிரதாயத்தை அடியார்களுடன் சேர்ந்து உண்ண வேண்டும். விரத அனுட்டானத்தை தொடர முடியாத முதுமைநிலையில் அதற்குரிய கிரியையை முறைப்படி செய்தபின் அதனை விட்டு விட வேண்டும். இறுதி விதிகளுக்கு உட்பட்டு மேற்கொண்டால் சிறந்த விசேட வழிபாடாகவும், குடும்பநலம், உடல் நலம், விசுவாசம், தன்னம்பிக்கை, துணிவு, பணிவு, பக்தி, அன்னியோன்யம், அன்பு, கருணை, ஒழுக்கம், நேர்மை என்ற உயர்ந்த பண்புகள் மேலோங்கும்.


## விரத வகைகள்

விரதங்களிலே பல வகையுண்டு. சிவ விரதம், சக்தி விரதம், விநாயக விரதம், சுப்பிரமணிய விரதம் முதலானவை முக்கியமானவைகளாகும். இவை தவிர ஆண்டுதோறும் மேற்கொள்ளப்படும் மகாசிவராத்திரி, சாரதநவராத்திரி,

ஆவணிச் சதுர்த்தி, திருக்கார்த்திகை விரதம் ஆகியன குறிப்பிடத்தக்க விரதங்களாகும். மாதந்தோறும் அனுட்டிக்கப்படும் மாத சிவராத்திரி, சதுர்த்தி, கார்த்திகை நாள் என்பனவும் சோமவாரம், வெள்ளிக்கிழமை போன்ற வார விரதங்களும் விரத வகைகளுக்குள் அடங்குகின்றது. ஆதலால் இங்கு கூறப்பட்ட விரத வகைகளுள் விநாயகருக்குரிய விநாயகர் சஷ்டி, சுப்பிரமணியனுக்குரிய கந்த சஷ்டி, சனீஸ்வரனுக்குரிய புரட்டாதிச்சனி விரதங்கள் பற்றித் தனித்தனியாகக் கற்போம்.

## (அ) விநாயக சஷ்டி

சைவ நெறியினர் ஓங்காரப் பொருளாக விளங்கும் விநாயகருக்கு முதன்மை இடம் கொடுத்து வழிபட்டு வருகின்றனர். பிள்ளையார் ,கணபதி, ஐங்கரன் போன்ற பெயர்களால் அழைக்கப்படும் விநாயகரை வழிபடுவதற்குரிய விரதங்களில் சுக்கிர வாரம், சதுர்த்தி விரதம், விநாயக சஷ்டி, சித்திர விநாயக சதுர்த்தி விரதம், கணபதி விரதம் என்பன குறிப்பிடத்தக்கன. இவற்றுள் விநாயக சஷ்டி விரதமே தலை சிறந்ததாக கருதப்படுகின்றது.



விநாயக சஷ்டி விரதம் கார்த்திகை மாதத் தேய் பிறை பிரதமை (முதலாம் நாள்) தொடக்கம் மார்கழி மாத வளர் பிறைச் சஷ்டி (ஆறாம் நாள்) வரை உள்ள இருபத்தொரு தினங்கள் அனுட்டிக்கப்படுவதாகும். இதனை சைவ மக்கள் பெருங்கதை விரதம், பிள்ளையார் கதை விரதம், பிள்ளையார் நோன்பு என்ற பெயர்களாலும் அழைத்து விரதமிருப்பர். இத்தினங்களில் நம்நாட்டு விநாயகர் ஆலயங்களில் வரத பண்டிதரின் பிள்ளையார் கதை, விநாயக புராணம் என்பவற்றைப் படனம் செய்யும் வழக்கம் நீண்ட காலம் பேணப்பட்டு வருகின்றது. பிள்ளையார் கதை படனம் செய்யும்போது

**கரும்பும் இளநீருங் காரெள்ளும் தேனும்**
**விரும்பும் அவல் பலமும் மேற்மேல் - அருந்திக்**
**குணமுடையனாய் வந்து குற்றங்கள் தீர்க்குங்**
**கணபதியே இக்கதைக்கு காப்பு''**
**என்று காப்பு செய்யுற் பாடப்பட்டு,**

**'திருவாசகஞ் செய்கருமங்கை கூட்டு செஞ்சொற்**
**ஆதலால் வானோடும் ஆனை முகத்தானைக்**
**காதலாற் உப்புவர் தம் கை''**

**என்ற விநாயகர் துதியோடு பெருங்கதை படிக்கப்படும்.**

விநாயக சஷ்டி விரதத்தில் பல நியதிகள் உள்ளடங்குகின்றன. அவையாவன..

1. விரதத் தொடக்க நாளில் இருபத்தியொரு இழைகள் கொண்ட காப்பை ஆண்கள் வலக் கையிலும் பெண்கள் இடக் கையிலும் அணிந்து கொள்ளல்.

2. முதலிரு தினங்களும் ஒருபொழுது நண்பகலில் உணவு உண்ணலும் இரவில் பால் பழம் உண்ணலும்.

3. நாள்தோறும் விநாயகருக்கு இளநீர், கரும்பு மோதகம் ,அவல், எள்ளுருண்டை என்பவற்றை நிவேதனம் செய்தல்.

4. இறுதித் தினத்தில் உபவாசம் இருத்தல்.

5. பாரணைத் தினத்தில் காலைப் பொழுதில் அவதானமாக காப்பை அணிவித்தல்.

6. பாரணையின் போது அடியவர்கள், உறவினர்களுடன் சேர்ந்து உணவு உட்கொள்ளல் என்பன குறிப்பிடத்தக்கனவாகும்.

இவ்விரதத்தை இருபத்தொரு வருடங்கள் அனுட்டிப்பது உத்தமமாகக் கருதப் படுகின்றது. அவ்வாறு செய்ய இயலாதவர்கள் ஏழு வருடங்களாவது நோற்பது சிறப்புக் குரியதாகும்.

## (ஆ) கந்த சஷ்டி



சிவபெருமானின் திருக்குமாரர்களில் இளையவர் கந்தப் பெருமானாவார். இவர் சுப்பிரமணியன், கார்த்திகேயன், சரவணபவன், ஆறுமுகன், முருகன், குமரன் என்ற சிறப்புக் காரணப் பெயர்களாலும் அழைக்கப்படுபவர். கந்தப் பெருமானை சிறப்பாக வழிபடுவதற்குரிய விரத வகைகளில் சுக்கிர வாரம், கார்த்திகை விரதம், திருக் கார்த்திகை விரதம், கந்தசஷ்டி விரதம் என்பன குறிப்பிடத்தக்கன. இவற்றுள் ஆண்டு விரதமான கந்த சஷ்டி விரதம் பற்றி கற்போம்.

கந்தசஷ்டி என்பது பெருமான் சூரசங்காரம் செய்து, தேவர்களைக் காத்த அருட் செயலைக் குறிக்கும். இவ்விரதம் ஐப்பசி மாதத்துத் தீபாவளி அமாவாசையை அடுத்து அதாவது வளர்பிறையில் பிரதமை தொடக்கம் சட்டிவரையுள்ள ஆறு தினங்களும் அனுட்டிக்கப்படுவதாகும். செல்வங்கள், சுகபோகங்கள், நற்புத்திரப்பேறு என்பவற்றை முன்னிட்டு முருகனைக் குல தெய்வமாகவோ இஷ்ட தெய்வமாகவோ வழிபடுவோரும் பிறரும் இவ் விரதத்தை அனுட்டிப்பர். தீவிர முருகன் அடியார்கள் இவ்விரதத்தை கடும் தவமாகக் கருதி ஆறு தினங்களும் உபவாசம் இருத்தல் வழக்கமாகும். இவ்வுத்தம முறையைக் கடைப்பிடிக்க இயலாதவர்கள் ஐந்து தினங்கள் ஒருவேளை உண்ணுதலும் ஆறாம் நாள்

உபவாசம் இருத்தலும் மேலும் சிலர் ஒருபொழுது பால் பழம் அருந்தி இருத்தலும் நடைமுறையாக உள்ளது.



இவ்விரதத்தின் ஆறாம்நாள் முருகன் ஆலயங்களில் 'சூரன் போர்' என்னும் சமய நிகழ்வு நாடக பாணியில் இடம்பெறுதல் வழக்கம். மனிதர்களின் உட்பகையாக உள்ள காமம், வெகுளி, ஈயாமை, மயக்கம், செருக்கு, பொறாமை என்னும் அசுரப் பண்புகளை அழித்து அவர்கள் தெய்வீக நிலையில் பெருவாழ்வு வாழ அருள்பாலிக்கும் இறைவன் ஆற்றலின் பெருமை கந்த சஷ்டி உணர்த்தும் மெய்ப்பொருள் ஆகும்.

கந்த சஷ்டி விரத்தின் மகிமையையும் பயனையும் கந்த புராண விரதப் படலம் - 23ஆம் பாடல் சிறப்பானதாகும். அது மனனம் செய்வதற்கும் பொருத்தமானதாகும். அப்பாடல்

**'ஆரண முனிவர் வானோர் அங்கதன் மற்றை வைகல்**
**சீரணி முருக வேட்டுச் சிறப்பொடு பூசை ஆற்றிப் பூ**
**பாரணம் விதியிற் செய்தார் பயிற்றம் இவ்விரதம் தன்னால்**
**தாரணி அவுணர் கொண்ட தம் பதத் தலைமை பெற்றார்'**

என்பது அப்பாடலாகும்.இவ்விரத நியதிகளில் பின்வருவன குறிப்பிடத்தக்கன.

1. அமாவாசை தினத்தில் ஒருவேளை உணவு உண்ணல்.
2. ஆரம்ப நாளில் ஆலயத்தில் தர்ப்பை அணிந்து காப்பு கட்டல்
3. ஆறு தினங்களும் முருகன் ஆலயத்தில் இறை வழிபாடு, புராணப்படணம் போன்ற செயல்களில் ஈடுபடல்.
4. இறுதி நாளில் காப்பை அவிழ்த்து தட்சணையுடன் அர்ச்சகரிடம் சமர்ப்பித்தல்.
5. ஏழாம் நாள் அதிகாலை நீராடி அனுட்டானங்களை நிறைவேற்றி பாரணைப் பூசை முடிந்ததும் மகேசுர பூசை செய்து விரதத்தைப் பூர்த்தி செய்தல் என்பன முக்கியமானவையாகும்.



## (இ)புரட்டாதிச் சனி

நவக்கிரகங்களில் சனீஸ்வரனும் ஒருவர். இவர் சூரிய பகவானுக்கும் உஷா தேவிக்கும் மகனாகத் தோன்றியவர் என்பது புராணக்கதையாகும். இவர் தோற்றம் புரட்டாதி மாதச் சனிக்கிழமையாகும். சனி பகவான் என்றும் அழைக்கப்படுபவர். இதனால்தான் புரட்டாதி மாதச் சனிக்கிழமை சனி பகவானுக்கு விசேட நாளாகக் கொள்ளப்படுவதோடு விரதமும் அனுட்டிக்கப்படுகின்றது.

சனி பகவான் தன்னை வழிபடும் அடியார்களுக்கு பாவங்களை நீக்கி அவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பவர். அதனால் வருடந்தோறும் வரும் அனைத்துச் சனிக் கிழமைகளிலும் விரதம் அனுட்டிக்காவிட்டாலும் புரட்டாதி மாதச் சனிக் கிழமைகளிலாவது விரதமிருப்பது நன்றாகும். இதற்காகவே நவக்கிரகங்கள் அமைந்துள்ள கோயில்கள் இந்தியாவில் திருநள்ளாற்றில் திருமலையில் மடத்தடியில் அமைக்கப்பட்ட கோயில்களில் புரட்டாதி மாத சனிக் கிழமைகளில் விசேட பூசைகள் நடைபெறுகின்றன. புரட்டாதிச் சனி வழிபாட்டில் எள்ளும், கறுப்பு நிறமும் பிரதானமாக இடம்பெற வேண்டும். இதனால் எள்ளுச்சாதம், கறுப்புப்பட்டு என்பன வைத்து வழிபடல் சிறப்பானதாகும்.

இவரின் வாகனம் காகமாகும். இதனால் இந்துக்கள் காகத்திற்கு உணவு படைப்பதை வழமையாகக் கொண்டும் தாம் உண்ணும் உணவிலும் நல்லெண்ணெய், எள்ளு என்பவற்றையும் சேர்த்துள்ளார்கள்.மேலும் சனிக்கிழமையில் எள்ளு, கறுப்புத்துணி, நல்லெண்ணெய் என்பவற்றை தானம் செய்தால் சனி தோசம் நீங்கும் என்ற கருத்தும் மக்கள் மத்தியில் நிலவுகிறது.

சனி பகவானை ஆயுட்காரன், பாவத்தின் கிரகம் என்றும் அழைக்கும் வழக்குமுண்டு. மனிதப்பிறவியாகிய புனிதப்பிறவி எடுத்திருக்கும் ஒவ்வொருவருக்கும் இவரே வாழ்க்கையை நிர்ணயிப்பவர். 'சனியைப் போலக் கொடுப்போரும் இல்லை. சனியைப் போல கெடுப்பாரும் இல்லை' என்று கூறுவதுமுண்டு. ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் மூன்று தரம் ஏழரைச் சனிவரும். முப்பது வருடம் முடிய ஒருமுறை என்று மூன்று தடவைகள் மங்கு சனி, பொங்கு சனி, மரணச்சனி எனக் கூறுவாருமுளர்.

சனி பகவானால் பீடிக்கப்படாதவர்கள் இருவர் மட்டுமே. ஒருவர் பிள்ளையார். மற்றவர் ஆஞ்சனேயர். ஒருமுறை இராமர் இலங்கை வருவதற்காக அனுமான் பாலம் கட்டிக்கொண்டிருந்தார். அப்போது சனி பகவான் வந்து, இப்போது உன்னை நான் பீடிக்கப் போகிறேன். உன் உடம்பில் ஓரிடம் கொடு என்றாராம். ஆஞ்சனேயரோ சனீஸ்வரரே நான் இப்போது இராமகாரியம் செய்கிறேன். சீதையை மீட்ட பின்பு வந்து என்னைப் பிடியுங்கள் என்றார். சனீஸ்வரரோ 'இது காலதேவன் கட்டளை' எனச் சொல்ல, ஆஞ்சனேயர் சரி என்னுடைய தலையிலே அமருங்கள்' என்றாராம். உடனே சனீஸ்வரன் தலையிலே ஏறி அமர்ந்து கொண்டார். பெரிய பெரிய மலைகளைத் தூக்கி தலையிலே வைத்தார். ஆஞ்சநேயர் தலையில் பாரம் ஏற ஏற சனீஸ்வரனால் தாங்க முடியவில்லை. உடனே கீழே குதித்து விட்டார். ஏன் என ஆஞ்சநேயர் கேட்க நீ என்னை வென்று விட்டாய். எனவே ஏழரை விநாடி மட்டும் உன்னைப் பீடித்து விலகுகிறேன் எனக் கூறினாராம். சனி பகவானைப் பார்த்து ஆஞ்சனேயர் இராமநாமம் சொல்லுபவர்களை நீங்கள் பிடித்து அதிகம் வருத்தக்கூடாது எனக் கேட்டுக் கொண்டாராம்.

இதுபோலவே பிள்ளையாரை சனி பகவான் பிடிக்கச் சென்றபோது அவர் தன் முதுகைக் காட்டி நாளை என்று சொன்னாராம். நாளை என்று கூறியபடியால் ஒவ்வொருநாளும் சென்றும் பிள்ளையாரைப் பிடிக்க முடியவில்லை. பிள்ளை யாரிடமும் தோற்ற சனீஸ்வரன் உம்மை வணங்குவோருக்கு அதிகம் துன்பம் வராது

எனக் கூறிச் சென்றதாக அறிய முடிகிறது. ஆதலால் புரட்டாதி மாதச் சனி விரதத்தை முறைப்படி அனுட்டிப்பதால் துன்ப துயரங்களை வெற்றி கொண்டு மங்களகரமாக வாழ முடியும்.

வாழ்வோடு இணைந்துள்ளதால் இத்தோசம் உள்ளவர்கள் இவற்றைக் கடைப்பிடிப்பது சிறந்ததாகும். நல்லெண்ணெய் செப்புப் பாத்திரம் ஒன்றில் எடுத்து அதில் முகத்தை பார்த்த பின் தானம் செய்தலும் சிறந்ததாக கருதப்படுகின்றது.

புரட்டாதிச் சனியன்று கோயில்களில் கறுப்புத் துணியில் எள்ளைப் பொட்டலமாகக் கட்டி அதனை ஒரு சிறிய மண் சட்டியில் விட்டு எடுத்து வழிபட்டால் சனி தோசம் நீங்கும். பொட்டலம் முற்றாக எதிர் நீறாவதற்கேற்ற அளவுக்கு எண்ணெய் விட்டெடுத்தல் வேண்டும். இவ்வாறு புரட்டாதி விரதம் கடைப்பிடிப்பது பொருத்தமானதாகும்.



**பயிற்சிகள்**

1. விரதம் என்றால் என்ன?
2. விரதம் அனுட்டிப்பதால் ஏற்படும் நற்பண்புகள் சில தருக.
3. விரத வகைகள் யாவை?
4. விநாயக சஷ்டி விரதம் வேறு எப்பெயர்களால் அழைக்கப்படும்?
5. விநாயக சஷ்டி விரத நியதிகள் சிலவற்றை எழுதுக.
6. முருக விரதங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
7. கந்த சஷ்டி விரதம் அனுட்டிக்கப்படும் காலம் யாது?
8. கந்த சஷ்டி விரத இறுதி நாளன்று ஆலயங்களில் இடம்பெறும் முக்கிய சமய நிகழ்வு யாது?
9. கந்த சஷ்டி விரத நியதிகள் சிலவற்றை எழுதுக.
10. புரட்டாதிச் சனி யாருக்காக அனுட்டிக்கப்படுகிறது? இவ்விரதத்துக்குரிய விரத பொருட்கள் யாவை?

## செயற்பாடுகள்

★ விரதங்களின் வகை, அவை ஒவ்வொன்றையும் அனுட்டிப்பதற்கான நோக்கங்கள், அனுட்டிக்கும் முறைகள் முதலான தகவல்களைச் சேகரித்து அட்டவணைப்படுத்தி வகுப்பறையில் காட்சிப் படுத்துக.

★ மாணவர்களை இரண்டு அல்லது மூன்று குழுக்களாக பிரித்து 'விரதங்களின் மகிமை' அல்லது 'சூரன் போர்' என்ற தலைப்பில் வில்லிசை ஒன்றை ஆசிரியர் உதவியுடன் நிகழ்த்துக.

## பாடச்சுருக்கம்

★ விரத அனுட்டானங்களை நியம முறையுடன் அனுட்டிக்க வேண்டும்.

★ விரதம், உபவாசம், நோன்பு போன்ற சொற்களாலும் அழைக்கப்படும்.

★ வார விரதம், மாத விரதம், வருட விரதம் என விரதங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

★ விநாயக சஷ்டி விநாயக விரதங்களில் ஒன்று. பெருங்கதை, பிள்ளையார் கதை போன்ற பெயர்களாலும் அழைக்கப்படும் இவ்விரதம் கார்த்திகை மாதம் தேய்பிறை பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறைச் சட்டி வரை உள்ள இருபத்தியொரு தினங்கள் அனுட்டிப்பதாகும்.

★ முருக விரதங்களுள் கந்த சஷ்டியும் ஒன்றாகும். இது ஐப்பசி மாதத்துத் தீபாவளி அமாவாசையை அடுத்து அதாவது, வளர் பிறையில் பிரதமை தொடக்கம் சட்டிவரையுள்ள ஆறு தினங்கள் அனுட்டிப்பதாகும்.

★ புரட்டாதிச் சனி, சனி பகவானுக்குரிய விரதமாகும்.

★ எள்ளு, கறுப்புத்துணி சனி பகவானுக்குரிய முக்கிய விரதப்பொருட்களாகும்.